
## திராவிடத்தால் வாழ்கிறோம்

818

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

8

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

1950-களுக்குப் பின்னர் தமிழ் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக்கொண்டனர். அடுத்த 10 ஆண்டுகளில் கட்சியின் முக்கியப் பொறுப்புகளில் முஸ்லிம்கள் இருந்தனர். அதற்கு, சுயமரியாதை இயக்கக் காலம்தொட்டு பெரியார் இஸ்லாமியர்களிடம் காட்டிய நட்புறவின் தொடர்ச்சியாக, பேரறிஞர் அண்ணா இருந்தார் என்பது மிக முக்கியக் காரணம். மிலாது நபி விழாக்களில் மறவாமல் அண்ணா, கலைஞர் உள்பட கழக முன்னோடிகள் பலரும் பங்கேற்றனர். இஸ்லாமிய சமூகத்தை அரவணைக்கும் குரல் அண்ணாவிடமிருந்து எழுந்துகொண்டே இருந்தது. அதுநாள்வரை இஸ்லாமிய சமூகத்தோடு நெருங்காமல் இருந்தவர்களையும் அண்ணாவின் அழுத்தமான ஆதரவு நெருங்கச் செய்தது.

குறிப்பாக, 1967-ஆம் ஆண்டு தேர்தல்களத்தில் ராஜாஜியின் சுதந்திரா கட்சியும், முஸ்லிம் லீக் கட்சியும் தி.மு.கழகத்துடன் ஒன்றாகக் கூட்டணியில் இருந்தன. அதற்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே விருதுநகர், அருப்புக்கோட்டை, கீழக்கரை, வேலூர் பகுதிகளில் முஸ்லிம் லீக் மாநாடுகள் நடைபெற்றன. அதில், 1965-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வேலூரில் நடைபெற்ற வட ஆற்காடு முஸ்லிம் லீக் மாநாட்டில், அண்ணாவுடன் இணைந்து ராஜாஜியும் முதன்முதலாக இஸ்லாமியர் மாநாட்டில் பங்கேற்றார். ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அம்மாநாட்டில் திரண்டனர். தி.மு.கழகக் கூட்டணியால் மட்டுமே இது சாத்தியமானது.

### இரண்டு வழிகள்

பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இஸ்லாமியர்களுக்குமான உறவு இரண்டு வழிகளில் உருவானது. ஒன்று, நேரடியாக தி.மு.கழகத் தொண்டர் ஆனது. மற்றொன்று, முஸ்லிம் லீக்கின் மூலம் உருவான கூட்டணிப் பந்தம். இந்த இரண்டு வழிகளும்தான் இஸ்லாமியர்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு பெரும் வழி ஏற்படுத்தின. குறிப்பாக, அண்ணாவின் முதல் அமைச்சரவையில் சாதிக் பாட்சா அமைச்சர் ஆனதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். ஆனால், அதற்கு முன்பே, 1964-இல் நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களில் வேலூர், மேலப்பாளையம், திருநெல்வேலி, தஞ்சாவூர், பாளையங்கோட்டை, பொள்ளாச்சி, பெரியகுளம், காஞ்சிபுரம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் தி.மு.க.வைச் சேர்ந்த இஸ்லாமியர்களே வாகை சூடினர். மதராஸ் நகர கார்ப்பரேசன் தேர்தலிலும், 2 முஸ்லிம் சுயேட்சைகள் தி.மு.க. ஆதரவுடன் வென்றனர்.

அதன் தொடர்ச்சியாகத்தான், 1967-இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது, சாதிக் பாட்சாவை அமைச்சராக்கினார் பேரறிஞர் அண்ணா. எனினும் இரண்டே ஆண்டுகளில் பெருந்துயராக, பேரிடியாக பேரறிஞர் அண்ணாவின் மறைவு நிகழ்ந்துவிட, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றார். அண்ணா தொடங்கி வைத்த சமூக நீதிப் பரவலாக்கத்தை, விரைவுபடுத்தினார், முத்தமிழறிஞர் கலைஞர். ஆட்சியில், அதிகாரத்தில், கல்வியில், வேலை வாய்ப்பில் என அனைத்துத் தளங்களிலும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான வாயிற்கதவைத் திறந்து வைத்தார் கலைஞர். சாதி ரீதியாகவும், மத ரீதியாகவும் ஒடுக்கப்பட்டவர்கள், சிறுபான்மையினர்கள் மட்டுமின்றி, எல்லா மதங்களிலும் எல்லா சாதிகளிலும் ஒடுக்கப்பட்டவர்களாக, உரிமையற்றவர்களாக இருந்த பெண்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகளுக்கும் அந்தக் கதவு முதன்முறையாக திறக்கப்பட்டது.

அமர்ந்தபோது, சட்டத்துறை அமைச்சர் பதவி சாதிக் பாட்சாவைத் தேடி வந்தது.

மீண்டும் 1996-இல் கலைஞர் ஆட்சியில் அமர்ந்ததும் ரகுமான் கான் தொழிலாளர் நலத்துறை அமைச்சரானார். 2006-இல் வணிக வரித்துறை அமைச்சராக உபயதுல்லா, சுற்றுச்சூழல் துறை அமைச்சராக எம்.மொகைதீன்கான் என இருவருக்கும் பிரதிநிதித்துவம் தந்தார் கலைஞர்.

### கலைஞர் போட்ட கடிவாளம்

கலைஞர் வழங்கிய அரசியல் பிரதிநிதித்துவத்தில் மிக முக்கியமானது சமூகப் பிரதிநிதித்துவமும் பாதுகாப்பும். அந்தப்



# கலைஞர் தந்த பாதுகாப்பும் பிரதிநிதித்துவமும்!

முதன்முறையாக ஆட்சிக்கு வந்தபோதே மிலாது நபிக்கு ‘அரசு விடுமுறை’ அளித்தார். அதன்பின்னர், சிறுபான்மையினர் நல ஆணையம் தொடங்கினார். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை நிறுவினார். வக்ஃபு வாரிய சொத்துக்களை அபகரிக்க திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறது இன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆனால், வக்ஃபு வாரிய சொத்துக்களைப் பராமரிக்க முதன்முதலாக மானியம் வழங்கிய கருணை உள்ளத்துக்குச் சொந்தக்காரர் கலைஞர். பரந்துபட்ட தளங்களில் இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவத்திற்கு கலைஞரின் ஒவ்வொரு ஆட்சிக்காலமும் விதையிட்டது.

அரசியல் ரீதியாகவும், அவர் இஸ்லாமியர்களின் இருப்பை உறுதிசெய்தார். அண்ணாவின்

> **“கலைஞருக்குப் பின், தலைவர் தாங்கிக் கொண்டிருக்கிறார். உறவு நீள்கிறது... பிரதிநிதித்துவம் தொடர்கிறது.”**

அமைச்சரவையில் இடம் பெற்ற சாதிக் பாட்சா, கலைஞரின் முதல் அமைச்சரவையிலும் தொடர்ந்தார். 1977-இல் தி.மு.கழகத்தின் பொருளாளராகவும் கலைஞரால் உயர்த்தப்பட்டவர் சாதிக் பாட்சா. குடும்பத்தின் நலனைக்கூட பொருட்படுத்தாமல், இறுதிவரை தி.மு.கழகத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர். தி.மு.கழகத்தில் எந்தப் பொறுப்புக்கும் ஊதியம் வழங்கும் பழக்கமில்லை. ஆனால், சாதிக் பாட்சாவின் பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு, கழகத்தின் பொருளாளர் பதவிக்கு மாத ஊதியம் என்ற நடைமுறையைக் கொண்டுவந்தார் கலைஞர். 1989-இல் மீண்டும் கழகம் ஆட்சியில்

பாதுகாப்பை அ.தி.மு.க.-வில் எம்.ஜி.ஆரும் தரவில்லை, ஜெயலலிதாவும் தரவில்லை, அதற்குப் பிறகு வந்தவர்களும் தரவில்லை. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ‘முஸ்லிம்களுக்கு ஒரு முஸ்லிம் லீக் இருப்பது போல, இந்துக்களுக்கு ஒரு இந்து முன்னணி’ என்று பேசியவர் எம்.ஜி.ஆர். அத்தகைய இந்து முன்னணியால் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சிக் காலங்களில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் மசூதிகளுக்கு அச்சுறுத்தலாக, அரசியலாக முன்னெடுக்கப்பட்டபோது, கலவர முயற்சிகளுக்குக் கடிவாளம் போட்டவர் கலைஞர்.

உழவர் திருநாளோடு சேர்த்து, மிலாது நபி உட்பட 6 முக்கிய நாட்களுக்கான விடுமுறையை 2003-இல் ரத்து செய்துவிட்டு, வரையறுக்கப்பட்ட விடுமுறை என வகைப்படுத்தி, தேவைப்படுவோர் அதில் 3 நாட்கள் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என மாற்றியவர், ஜெயலலிதா. அடுத்து வந்த கலைஞர் ஆட்சி, மிலாது நபிக்கு மீண்டும் விடுமுறை அளித்தது.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் ஆதரவுக்கரம் நீட்டியவர்கள் ஜெயலலிதாவுக்குப் பின்னர் வந்த அ.தி.மு.க.வினர். கலைஞரின் நீட்சியாக, குடியுரிமைத் திருத்தச் சட்டம், வக்ஃபு வாரிய திருத்தச் சட்டம் என, இஸ்லாமியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் ஒவ்வொன்றிலும் கொள்கை மாறாமல், ஆதரவுக் கரம் நீள்வது நமது கழகத்தலைவர், திராவிட மாடல் நாயகரின் தலைமையிலான தி.மு.கழகத்திடம் இருந்துதான். அதனால்தான், காயிதே மில்லத் மறைந்த பின்பு, காயிதே மில்லத் தாங்கிவந்த இஸ்லாமிய சமூகத்தை, இப்போது கலைஞர் தன் கையில் தாங்கிக் கொண்டிருக்கிறார் என நாளேடுகள் எழுதின.

கலைஞருக்குப் பின், தலைவர் தாங்கிக் கொண்டிருக்கிறார். உறவு நீள்கிறது... பிரதிநிதித்துவம் தொடர்கிறது..

...நீளும்

## `மோடி படமும், மோசடிக் கும்பல்களும்!

‘பி.எம். மோடி ஏ.சி. யோஜனா–2025’ என்ற திட்டத்தின் கீழ், மின்சாரத்தைச் சேமிக்கும் 5 நட்சத்திர ஏ.சி.யை ஒன்றிய அரசு வழங்க உள்ளது என, சமூக ஊடகங்களில் ஒரு செய்தி பரவி, வடமாநிலங்களில் பரவலான கவனம் பெற்றது.

இந்தத் திட்டம் மே 2025–இல் தொடங்கும் என்றும், ஒன்றிய மின்சக்தித் துறை, விரைவில் ஏ.சி.களை வழங்க ஏற்பாடு செய்துள்ளது என்றும் கூறி, அந்த ஏ.சி.யைப் பெறுவதற்கு, வங்கிக் கணக்கு உள்ளிட்ட சில இணைப்புகளையும் பகிர்ந்துள்ளனர். அந்த இணைப்பில், பதிவு செய்தால், 30 நாட்களுக்குள் உங்களுக்கு ஒரு புதிய ஏ.சி. பொருத்தப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

அந்தச் செய்தி பரவலான நிலையில், உண்மை சரிபார்ப்புக் குழுக்கள் அந்தச் செய்தி உண்மை இல்லை; போலியானது என கண்டறிந்து கூறின. ஒன்றிய தகவல் தொடர்புத் துறையும் இதுதொடர்பாக, உண்மை சரிபார்ப்பினை வெளியிட்டு, அவை ‘போலி செய்திகள்’ என்று அறிவித்தது. ஆனாலும், அந்த இணைப்பு தொடர்ச்சியாக பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

வட மாநிலங்களில் நிலவும் வருத்தமான நிலை இதுதான். உண்மை சரிபார்ப்புக்குப் பிறகும் மக்களை ஏமாற்றும் நோக்கில் பலரும் பகிர்ந்து வருகின்றனர். குறைந்த விலையில் அல்லது இலவசமாகவோ ஏ.சி. உள்ளிட்ட சாதனங்களை வழங்க முடியாது என அறிந்தும், மக்களை ஏமாற்ற முடியும் என சிலர் இயங்குகின்றனர். ஏற்கனவே, ஃப்ரீடம் ஸ்மார்ட்போன் குறைந்த விலைக்கு கொடுக்கிறோம் என மோடி படத்தைப் போட்டு விளம்பரம் செய்து, பல கோடியைச் சுருட்டியது ஒரு கும்பல். அதேபோன்று ஒரு கும்பல் தற்போது மோடி படத்தைப் போட்டு வசூலில் இறங்கி உள்ளனர். மோசடிக் கும்பல்களுக்கு ‘மோடி’ படம் பாதுகாப்பையும் அளிக்கிறது, என்பதுதான் அதில் உள்ள உண்மை.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன் மறக்க முடியாத ஒரு புகைப்படம்!



அ.தாமஸ்

4.11.2008 அன்று இலங்கைத் தமிழர்கள் நிவாரண நிதிக்கு, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் மூன்றாயிரம் ரூபாய், முதலமைச்சர் நிவாரண நிதி வழங்கும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது நான், அமைச்சர் பொன்முடி அவர்களின் நேர்முக உதவியாளராகப் பணியாற்றினேன். அன்று எடுக்கப்பட்ட புகைப்படத்தில் அமைச்சர் க.பொன்முடி அவர்கள், முதுநிலை நேர்முக உதவியாளர் ஜீவானந்தம் ஆகியோருடன் நானும் இடம்பெற்றது மறக்க முடியாத நினைவு.

– அ.தாமஸ்,
பெரியார் நகர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு / ம்லவுருக

### ஆதிதிராவிடர் பெயர் தீர்மானம்!

1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திருவாரூரில் நீதிக்கட்சியின், ‘15-வது மாநில மாநாடு’ இரண்டு நாட்கள் நடைபெற்றது. பெரியார் தலைமை வகித்த அந்த மாநாட்டில், திராவிட நாட்டு ஆதிதிராவிட மக்களை ‘அரிஜன்’ என்கிற பெயரால் அழைக்கக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ‘ஆதிதிராவிடர்கள்’ என்கிற பெயரிலேயே அழைக்கப்பட வேண்டும் என அரசையும் பொதுமக்களையும் அந்த மாநாடு கேட்டுக் கொண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131